

மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி முன்னிலையில் மேற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சோலைஅழகுபுரம் பகுதி அதிமுக 81வது வட்ட செயலாளர் மரக்கடை கே.சரவணன், துணைச் செயலாளர்கள் ஆனந்த் பாபு, விஜய் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட அ.தி.மு.க.வினர் அக்கட்சியிலிருந்து விலகி தி.மு.க.வில் இணைந்தனர். உடன் ஒன்றிய பொறுப்பாளர்கள் தன்ராஜ், முத்தையன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### சி.பிரதீப் தலைமை! ஜி.எஸ்.செந்தில்முருகன் வரவேற்புரையில்

# விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி ஒன்றிய - நகர - பேரூர்க் கழக நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

### செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ – எஸ்.கே.பி.கருணா சிறப்புரை!

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம் நாளை (02.08.2025 - சனிக்கிழமை), காலை 10 மணிக்கு, திண்டிவனம், சென்னை நெடுஞ்சாலை, ஹோட்டல் ஆர்யாஸ் கார்டனில் நடைபெறுகிறது.

கழக பொறியாளர் அணி துணைச் செயலாளர், பொறியாளர் அணி கடலூர் மண்டல பொறுப்பாளர் சி.பிரதீப் தலைமை வகிக்கிறார்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி அமைப்பாளர் ஜி.எஸ். செந்தில் முருகன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

சி.சக்தி சரவணன், பி.ஏழுமலை, ஜி.பி.எஸ்.முருகன், ஜெ.ரசூல் பாஷா, பி.சரவணன், பி.சிவப்பிரகாசம், ஜி.வெங்கடேச பெருமாள், வி.மலையரசன், ஜி. மோகன் தாஸ், கே.பிரபாகரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ, கழக பொறியாளர் அணிச் செயலாளர் எஸ்.கே.பி.கருணா கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக பொறியாளர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றனர்.

திண்டிவனம் நகர பொறியாளர் அணி அமைப்பாளர் எம்.வெங்கடேசன் நன்றி உரை ஆற்றுகிறார்.

பொருள்:-

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக பொறியாளர் அணி நிர்வாகிகள் அறிமுகம்,

தலைவர் தளபதி அவர்களின் ஆணைப்படி ஓரணியில் தமிழ்நாடு கருத்தினை பொறியாளர் அணி சார்பில் முன்னெடுத்தல்,

விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள கிளைகள் தோறும் பொறியாளர் அணி உறுப்பினர்களை சேர்த்தல், கழக ஆக்கப் பணிகள்.

**விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி**

# நீலகிரி-நடுஹட்டியில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாம்!

### அரசு தலைமைக் கொறடா கா.இராமச்சந்திரன் பங்கேற்பு!

நீலகிரி, ஆக. 1–

அரசு வீடு தேடி வந்து மக்கள் பிரச்சினைகளை தீர்க்கும் மகத்தான ஆட்சியை தந்து கொண்டிருக்கும் நலத்திட்ட நாயகர், கழகத் தலைவர், முதல்வர் தளபதியார் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட உன்னத திட்ட மான ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமானது, நீலகிரி மாவட்டம் நடுஹட்டி கிராம ஊராட்சிக்குட்பட்ட வெஸ்ட் ஃபுருக் வி.பி.ஆர்.சி கட்டிடத்தில் நடைபெற்றது.

அதனை அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், கூடுதல் (வளர்ச்சி) செல்வி அபிலாஷா கெவுர், அவர்களுடன் நேரில் பார்வையிட்டு, மக்களிடம் அவர்களின் கோரிக்கைகள் குறித்தும், முகாம் ஏற்பாடு குறித்து அரசு அலுவலர்களிடமும் கலந்துரை யாடினர்.


மேலும் தோட்டக்கலை துறையில் பெறப்பட்ட மனுக்களை கேட்டறிந்து, உடனடி தீர்வாக இயற்கை முறையில் பூச்சிகளை கட்டுப்படுத்தும் மஞ்சள் நிற ஒட்டுப் பொறி யினை விவசாயிகளுக்கு வழங்கினர்.

இந்நிகழ்வின் போது, நீலகிரி மாவட்டக் கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு, தலைமை பொதுக்குழு உறுப்பினர் வீரபத்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் செந்தில் ரங்கராஜ், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் சந்திப்குமார், ஃபாரூக், பிரதீப், கிருஷ்ணன் உட்பட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஈரோடு மு. சின்னசாமி

### ஆகஸ்ட் 1 (1979)



தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக 1967ல் ஈரோடு தொகுதியிலும், 1971ல் மொடக்குறிச்சி தொகுதியிலும் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாக பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

ஈரோடு, ஆப்பக்கூடலில் 1969ஆம் ஆண்டு ஏப்ரல் 7ஆம் தேதி தலைவர் கலைஞர் கலந்து கொண்ட கூட்டத்தில் திடீரென்று சூறாவளிக் காற்றுடன் பலத்த மழை கொட்டியதால் பந்தல் மேடை சரிந்து விழுந்ததோடு, மின்சாரமும் தடைபட்டு என்ன நடக்கிறது என்று தெரியாத நிலை ஏற்பட்டபோது, தலைவரை தனது தோளில் தூக்கிக் கொண்டு காருக்கு சென்று சேர்த்தார்.



இந்நிகழ்வை தலைவர் கலைஞர் தனது ‘நெஞ்சுக்கு நீதி’ நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர்!

## நேற்று முன்தினம் (30 – 7 – 2025) நிகழ்வுகள்!



### 1. கிராமப் பஞ்சாயத்துகளின் சொந்த வருவாய் மேம்பட என்ன நடவடிக்கை?

**கனிமொழி கருணாநிதி கேள்வி!**



கழகப் துணைப் பொதுச் செயலாளரும், திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி கிராமப் பஞ்சாயத்துகளின் நிதி சுய சார்பு குறித்த கேள்விகளை நாடாளுமன்றத்தில் எழுப்பினார்.

2017 முதல் 2024 வரையிலான காலகட்டத்தில், மாநில மற்றும் ஆண்டு வாரியாக, நாட்டில் உள்ள கிராம பஞ்சாயத்துகளின் சொந்த வளத்தின் அடிப்படையிலான வருவாய் (OSR) மற்றும் தனிநபர் வருவாய் எவ்வளவு?

அதிக மற்றும் குறைந்த தனிநபர் OSR உள்ள மாநிலங்களிடையே இந்த ஏற்றத் தாழ்வுகளுக்கான முக்கிய காரணிகள் என்ன?

சொந்த வளத்தின் அடிப்படையிலான வருவாயை உருவாக்குவதில் கிராமப் பஞ்சாயத்துகள் எதிர்கொள்ளும் நிர்வாகத் தடைகள் உள்ளிட்ட சவால்களை அரசாங்கம் அடையாளம் கண்டுள்ளதா?

சொந்த வளத்தின் அடிப்படையிலான வருவாயை அதிகப்படுத்துவதன் மூலம், பஞ்சாயத்துகளின் நிதி சுயாட்சியை மேம்படுத்த திறன் மேம்பாட்டு முயற்சிகள், கொள்கை சீர்திருத்தங்கள் போன்ற அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன?

சொந்த வருவாய் குறைவு காரணமாக பஞ்சாயத்துகளின் செயல்பாடு மற்றும் சேவை வழங்கலில் ஏற்பட்டுள்ள தாக்கம் பற்றி அரசு ஏதேனும் மதிப்பீடு செய்துள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இல்லையென்றால், அதற்கான காரணங்கள்? ஆகிய கேள்விகளை எழுப்பினார்

### 2. சென்னை - அரக்கோணம் வழித்தடத்தில் தொடரும் விபத்துகளுக்கு தீர்வு என்ன?

**ஆ. இராசா கேள்வி!**



ஜூலை 13, 2025 அன்று தமிழ்நாட்டின் திருவள்ளூர் அருகே சரக்கு ரயிலில் கச்சா எண்ணெய் டேங்கர் லாரி தீப்பிடித்ததற்கான காரணங்கள் என்ன என்று ஒன்றிய இரயில்வே அமைச்சரிடம் திமுக துணைப் பொதுச் செயலாளர் ஆ. ராசா கேள்வி எழுப்பியுள்ளார். அதன் விவரங்கள் பின்வருமாறு:

தீ விபத்துக்கான காரணம் மற்றும் ரயில் உள்கட்டமைப்பிற்கு ஏற்பட்ட சேதத்தின் அளவு என்ன? இதுவரையில் ஏதேனும் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் ரயில் பாதையில் விரிசல் ஏற்பட்டதாக வந்த அறிக்கைகளை அரசு விசாரித்துள்ளதா, அப்படியானால், சாத்தியமான நாசவேலை அல்லது பாதை பாதுகாப்பு சிக்கல்களை நிவர்த்தி செய்ய எடுக்கப்பட்ட/எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

தெற்கு ரயில்வேயின் கீழ் இந்த தண்டவாளங்களின் பாதுகாப்பு தணிக்கை எப்போது செய்யப்பட்டது?

இரயில்வேயில் சிக்னல் மற்றும் தகவல்தொடர்பு அமைப்பு உட்பட அனைத்து தண்டவாளங்களின் பாதுகாப்பு தணிக்கை மற்றும் தடுப்பு பராமரிப்புக்கு அரசு உத்தவிட்டுள்ளதா?

சென்னைஅரக்கோணம் வழித்தடத்தில் இரயில்களை ரத்து செய்தல், திருப்பிவிடுதல் மற்றும் குறுகிய நிறுத்தம் உள்ளிட்ட ரயில் சேவைகளுக்கு ஏற்படும் இடையூறுகளைத் தணிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன?

அபாயகரமான பொருட்களை ஏற்றிச் செல்லும் சரக்கு இரயில்களில் இதே போன்ற விபத்துகளைத் தடுக்க செயல்படுத்தப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ன?

பாதிக்கப்பட்ட பாதையில் முழு இரயில் இயக்கங்களை மீட்டெடுப்பதற்கான காலக்கெடு மற்றும் பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு ஏதேனும் இழப்பீடு திட்ட மிடப்பட்டுள்ளதா?

### 3. ஆளில்லாத லெவல் கிராசிங் மரணங்கள் - இரயில்வே அமைச்சகத்தின் அலட்சியம்

**காஞ்சிபுரம் க.செல்வம் மற்றும் சி.என்.அண்ணாதுரை கண்டனம்.**





சமீபத்தில் ஒன்றிய இரயில்வே நிர்வா கத்தின் அலட்சியத்தால் கடலூரில் பள்ளி மாணவர்கள் உயிர் இழந்த நிலையில் இது குறித்து திமுக மக்களவை உறுப்பினர்கள் ஜி. செல்வம் மற்றும் சி. என். அண்ணாதுரை கேள்வி எழுப்பியுள்ளனர்.

தமிழ்நாட்டில், மாவட்ட வாரியாக, ஆளில்லா லெவல் கிராசிங் (ULC) எண்ணிக்கையின் விவரங்கள் என்ன?

செயல்பாட்டு ரயில் பாதைகளில் உள்ள அனைத்து ஆளில்லா லெவல் கிராசிங்குகளையும் அகற்றுவதற்கு அரசாங்கம் ஏதேனும் காலக்கெடுவை நிர்ணயித்துள்ளதா, அப்படியானால், குறிப்பிட்ட மாநிலத்தில் இலக்கு மற்றும் தற்போதைய முன்னேற்றம் பற்றிய விவரங்கள் என்ன?

பாதசாரிகள் மற்றும் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய ஒரு காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

தமிழ்நாடு முழுவதும் ஆளில்லா லெவல் கிராசிங்குகள் அகற்றப்பட்ட/நிரந்தரமாக மூடப்பட்ட நடைமேம்பாலம், சுரங்கப்பாதைகள் மற்றும் சாலை மாற்றுப்பாதைகள் போன்ற இடங்களில் பயணிகளுக்குச் செய்யப்பட்ட மாற்று ஏற்பாடுகள் என்ன?

குறிப்பிட்ட மாநிலத்தில் லெவல் கிராசிங்குகளில் பொது பாதுகாப்பை மேம்படுத்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளின் விவரங்கள், அதாவது வாயில்கள் நிறுவுதல், விழிப்புணர்வு பிரச்சாரங்கள், பணியாளர்களை நியமித்தல் மற்றும் தொழில்நுட்ப அடிப்படையிலான தலையீடுகள் என்ன? என்றும் அவர்கள் கேட்டுள்ளனர்.

### 4. சிறுபான்மையினரின் கல்வி மேம்பாட்டிற்கு நடவடிக்கை என்ன?

**பொள்ளாச்சி ஈஸ்வரசாமி கேள்வி!**



தமிழ்நாட்டில் சிறுபான்மையினரின் கல்விக்காக எடுக்கப்பட்ட புதிய முயற்சிகளின் விவரங்கள் கேட்டு பொள்ளாச்சி மக்களவை உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

சிறுபான்மையினரின் முறையான கல்வி வளர்ச்சியிலும் திட்டங்களை செயல்படுத்துவதிலும் எதிர்கொள்ளும் தடைகள் மற்றும் குறைபாடுகளின் விவரங்கள் என்ன மற்றும் அவற்றைச் சமாளிக்க அரசு எடுத்த/ எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

### 5. கடலோர பகுதிகளில் தானியங்கி வானிலை நிலையங்கள் அமைக்க நடவடிக்கை என்ன?

**தயாநிதி மாறன் கேள்வி**



தமிழ்நாட்டில், குறிப்பாக சென்னை, கடலூர் மற்றும் நாகப்பட்டினம் போன்ற வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடிய கடலோர மாவட்டங்களில் தானியங்கி வானிலை நிலையங்கள் (AWS) மற்றும் டாப்ளர் ரேடார்களை நிறுவுவது குறித்து நாடாளுமன்றத்தில் மத்திய சென்னை மக்களவை உறுப்பினர் தயாநிதி மாறன் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேற்கு தொடர்ச்சி மலைகள் மற்றும் டெல்டா பகுதிகளில் பாதிக்கப்படக்கூடிய புவியியல் பகுதிகளுக்கு உடனடி மற்றும் குறுகிய கால வானிலை முன்னறிவிப்பை மேம்படுத்த அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் என்ன?

வெள்ளத் தயார்நிலையை மேம்படுத்தவும் வாழ்விட அளவிலான சேதத்தைக் குறைக்கவும் நிகழ்நேர வானிலை எச்சரிக்கைகள் மற்றும் பாதிப்பு வரைபடத்தை ஒருங்கிணைக்க தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் (TNSDMA) மற்றும் உள்ளூர் பஞ்சாயத்துகளுடன் இணைந்து பணியாற்ற ஒன்றிய அரசின் திட்டம் என்ன?

தமிழ்நாட்டின் கிராமப்புற மக்கள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு இத்தகைய தகவல்கள் உடனடியாக கிடைக்கப் பெற மேம்படுத்தப்பட்ட IMD மொபைல் செயலி மற்றும் விவசாயிகளுக்கான குறிப்பிட்ட முன்னறிவிப்பு தளங்களின் தமிழ் மொழி பதிப்புகளை கிடைக்கச் செய்ய அரசு முன்மொழிகிறதா, அப்படியானால், அதன் விவரங்கள்?

### 6. மலிவு விலை கட்டணத்தில் புதிய இரயில்கள். தமிழ்நாட்டிற்கு வருமா அமிர்த பாரத்?

**கள்ளக்குறிச்சி தே.மலையரசன் கேள்வி!**



அமிர்த பாரத் எனும் மலிவு விலை கட்டணத்தில் ஏசி இல்லாத விரைவு இரயில்களை ஒன்றிய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. அந்த ரயில்களின் தற்போதைய நிலை மற்றும் முன்னேற்றம் குறித்து கள்ளக்குறிச்சி திமுக மக்களவை உறுப்பினர் மலையரசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த முயற்சியின் கீழ் அனுமதிக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதிகளின் விவரங்கள் என்ன? தமிழ்நாட்டிற்குள் இதுவரை அமிர்த பாரத் ரயில்கள் திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்ட ரயில்களின் எண்ணிக்கை என்ன?

அமிர்த பாரத் ரயில்களில் அறிமுகப்படுத்தப்பட்ட குறிப்பிட்ட அம்சங்கள் மற்றும் மேம்பாடுகள், குறிப்பாக பயணிகளின் வசதி, பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றின் விவரங்கள் என்ன?

உள்கட்டமைப்பு, ஊழியர்கள் பயிற்சி மற்றும் தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்வதில் இந்த ரயில்களின் சீரான இயக்கத்தை உறுதி செய்ய அரசாங்கம் எடுத்த/ எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன?

இந்த ரயில்களை நாடு முழுவதும் விரிவுபடுத்த அரசு முன்மொழிகிறதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

### தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

# தூத்துக்குடி தெற்கு மாவட்ட அமைப்பாளர் மற்றும் சமூக வலைதள பொறுப்பாளர் நியமனம்!

### தி.மு.க. மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி அறிவிப்பு!

தூத்துக்குடி தெற்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட திருமதி டி.ஆரோக்கியமேரி அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, **திருமதி வி.தயாநிதி** (159/5, சக்தி விநாயகர் காலனி, குமாரபுரம், திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம் - 628 215.) அவர்கள் **தூத்துக்குடி தெற்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளராக** நியமிக்கப்படுவதோடு;

மாவட்ட மகளிர் தொண்டர் அணி சமூக வலைதள பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட எம்.சுஜிப்ரீதி ஜாய் அவர்கள் சரிவர கழக பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **திருமதி ஆர்.சரோஜினி**, பி.ஏ., பி.எட்., (6/51, கிழக்கு தெரு, இடையர்காடு, தூத்துக்குடி மாவட்டம் - 628 802.) அவர்கள் **தூத்துக்குடி தெற்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி சமூக வலைதள பொறுப்பாளராக** நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 30-07-2025.

**நாமக்கல் ப.இராணி**
செயலாளர்
தி.மு.க. மகளிர் தொண்டர் அணி






விழுப்புரம் மாவட்டம் மயிலம் ஒன்றியம் கூட்டேரிப்பட்டு ஊராட்சியில் நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு விவசாயிகளுக்கு பழக்கன்றுகளை வழங்கினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், செந்தமிழ்ச்செல்வன், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர், ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன், ஒன்றிய செயலாளர் மணிமாறன் உள்ளிட்ட நிர்வாகிகள், துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.